# February 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அக்னி-3 நடுத்தர ரக பாலிஸ்டிக் ஏவுகணை சோதனையை இந்தியா வெள்ளிக்கிழமை வெற்றிகரமாக மேற்கொண்டது.

(i) ஒடிஸா மாநிலம் சண்டிபூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் தொழில்நுட்பம் உள்பட அனைத்துச் செயல்பாடுகளையும் அக்னி-3 ஏவுகணை துல்லியமாக மேற்கொண்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ii) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணை திட எரிபொருள் மூலம் இரண்டு நிலைகளில் இயங்கும் திறன் கொண்டது.

(iii) சுமார் 3,000 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் அக்னி-3 நடுத்தர ரக பாலிஸ்டிக் ஏவுகணை 1,500 கிலோ ஆயுதங்களைச் சுமந்து செல்லும் திறனுடையது. 48,300 கிலோ எடையுடைய இந்த ஏவுகணை 16.7 மீ. நீளமும், 2 மீ. விட்டமும் கொண்டது.

(iv) கடந்த 3 ஆண்டுகளாக அக்னி-3 ஏவுகணை சோதனைகளை முப்படைகளின் சிறப்புப் பிரிவு மேற்கொண்டு வருகிறது. அக்னி-1 பாலிஸ்டிக் ஏவுகணை 700 கி.மீ., அக்னி-2 ஏவுகணை 2,000 கி.மீ., அக்னி-3 ஏவுகணை 3,000 கி.மீ., அக்னி-4 ஏவுகணை 4,000 கி.மீ., அக்னி-5 ஏவுகணை 5,000 கி.மீ. தொலைவு வரை பயணித்து இலக்குகளைத் துல்லியமாகத் தகர்க்கும் வகையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

2. குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) பிணையில்லாக் கடன் உச்சவரம்பை இருமடங்காக அதாவது ரூ.20 லட்சமாக உயர்த்துவதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்தது. மும்பையில் நடைபெற்ற ஆர்பிஐ நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

- குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கான பிணையில்லாக் கடன் உச்சவரம்பு ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக, அதாவது இருமடங்கு உயர்த்தப்படுகிறது. ஏப்ரல் 1-ஆம் தேதியில் இருந்து வழங்கப்படும் மற்றும் புதுப்பிக்கப்படும் கடன்களுக்கு இந்தக் கூடுதல் கடன் தொகை வழங்கப்படும்.
- இந்த நிறுவனங்களின் செயல்பாடுகள், அவற்றின் திறனை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

(i) மோசடியில் பணம் இழந்தவர் களுக்கு இழப்பீடு:

- வங்கிச் சேவைகளில் இணையதளப் பயன்பாடு அதிகரித்துவிட்ட நிலையில், சில சமூக விரோதிகள் கைப்பேசியில் தொடர்புகொண்டு பல்வேறு வகையில் பேசி வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை திருடி மோசடியில் ஈடுபடுகின்றனர். இது போன்ற சூழலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு அளிக்க வேண்டியுள்ளது.
- சிறிய அளவிலான மோசடிகளில் பணம் இழந்தவர்களுக்கு நிதி இழப்புக்கு ஏற்ப ரூ.25,000 வரை இழப்பீடு வழங்க புதிய வழிமுறைகள் வகுக்கப்பட்டு வருகின்றன.
- மேலும், மூத்த குடிமக்களை நிதி மோசடியில் இருந்து காக்க சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- கடன் வசூல் முகவர்கள், கடனைத் திரும்ப வசூலிக்கும் முறை குறித்தும் புதிய வழிகாட்டுதல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

(ii) வட்டி விகிதத்தில் மாற்றமில்லை:

- வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்க ளுக்கான வட்டி (ரெப்போ ரேட்) விகிதம் மாற்றமில்லாமல் 5.25 சத வீதமாக தொடரும்.

- சர்வதேச அளவில் புவி அரசி யல் பதற்றங்கள் அதிகரித்தாலும், இந்தியப் பொருளாதாரம் வலு வாக உள்ளது. ஐரோப்பிய யூனி யனுடன் தடையற்ற வர்த்தக ஒப் பந்தம் மேற்கொள்ளப்பட்டுள் ளது. அமெரிக்காவுடனும் வர்த் தக ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தில் உள்ளது. இது இந்தியாவுக்கு நீண் டகாலத்துக்குப் பொருளாதார பலன்களை வழங்கக் கூடியதாக இருக்கும்.
- பணவீக்கத்தை 4 சதவீதத்தில் வைத்திருக்க ஆர்பிஐ இலக்கு நிர் ணயித்தது. ஆனால், சராசரியாக 2 சதவீதம் என்ற அளவிலேயே பண வீக்கம் உள்ளது. நடப்பு நிதியாண் டின் இறுதியான மார்ச் மாதத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

(iii) தங்க நகைக் கடன்:

- கடந்த 2 ஆண்டுகளில் நகைக் கடன் நிலுவை இரு மடங்காக அதிகரித் துள்ளது. நகையின் மதிப்பில் 85 சதவீதம் வரை கடன் வழங்கப்ப டுகிறது. தங்கத்தின் விலை அதிக ரித்துள்ளதால் வங்கிகள் அளித் துள்ள நகை அடமானக் கடன் குறித்து அதிகம் கவலை கொள் ளத் தேவையில்லை என்றார்.

3.தமிழகத்தின் முதல்முறையாக ரூ.14.50 கோடியில் அமைக்கப்படவுள்ள கடல் ஆமை பாதுகாப்பு மையத்தில் கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.கஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

(i) ஆண்டுதோறும் தமிழக கடற்கரைப் பகுதிகளில் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமைகள் ஆயிரக் கணக்கில் முட்டையிடுகின்றன. ஆனால், மின்பிடி நடவடிக்கைகனை தவறாக கையாளுதல், கடற்கரை வாழ்விட சேதம், கடல் மாகபாடு உள்ளிட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக ஆயிரம் குஞ்சுகளில் ஒன்று அல்லது இரண்டு மட்டுமே வளர்ந்து முதிர்ந்த நிலையை அடைகின்றன.

(ii) இதன் காரணமாக, தமிழக அரசு சார்பில் பல ஆண்டுகளாக ஒருங்கிணைந்த அறிவியல் சார்ந்த மற்றும் பல துறைகளின் அணுகுமுறை மூலம் கடல் ஆமை பாதுகாப்பிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(iii) அந்த வகையில் கடந்த 2019-2020- ஆம் ஆண்டில் கடல் ஆமைகளின் முட்டை சேகரிப்பு 70,700- ஆக இருந்தது. இருந்தத் தொடர்ந்து தமிழக அரசின் முயற்சியின் காரணமாக 2024-2025- ஆம் ஆண்டில் அவை 3.20 லட்சமாக வரலாற்று உச்சமாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் கடல் ஆமை பாதுகாப்பில் வளர்ந்து வரும் அறிவியல் மற்றும் செயல்பாட்டு சிக்கலைக்களைய, உலக வங்கியுடன் இணைந்து 'தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்' திட்டத்தின் கீழ், சென்னை, கிண்டியில் ரூ.14.50 கோடியில் கடல் ஆமை பாதுகாப்பு மையம் அமைக்கப்படவுள்ளது.

(iv) இதற்கான கட்டுமானப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த மையம் அறிவியல் ஆராய்ச்சி, டெலிமெட்ரி, கண்காணிப்பு மற்றும் மையப்படுத்தப்பட்ட தரவு மேலாண்மை ஆகியவற்றுக்கான சிறப்பு உள்கட்டமைப்பை வழங்கும்.

(v) பசுமையாக்கல் கொள்கை:

தமிழகத்தை காலநிலை தாங்குதிறன் கொண்ட, வாழ்வதற்கு உகந்த மற்றும் நிலையான நகரங்களாக உருவாக்கும் நோக்கத்துடன் 'தமிழ்நாடு மாநிலத்திற்கான நகர்ப்புற பசுமையாக்கல் கொள்கை 2026-ஐ முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இது, மாநிலம் முழுவதும் நகர்ப்புற திட்டமிடல் மற்றும் வளர்ச்சியில் மரங்கள், நகர்ப்புற காடுகள், ஆகியவற்றை ஒருங்கிணைப் பதற்கான விரிவான மற்றும் முன்னோடி கட்டமைப்பை வழங்கும்.

4. பத்தொன்பது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு-19) உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா 100 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி 6-ஆவது முறையாக சாம்பியன் கோப்பை வென்றது. போட்டியிலேயே அதிக முறை சாம்பியனான அணியாக இந்தியா தனது சாதனையை நீட்டித்துக் கொண்டுள்ளது.

(i) யு-19 உலகக்கோப்பை வரலாற்றில் சதம் விளாசிய இளம் வீரராக (14 வயது) வைபவ் சூர்யவன்ஷி சாதனை

படைத்தார்.

5. பத்தாவது டி.20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியா, இலங்கையில் சனிக்கிழமை (பிப். 7) தொடங்கி, மார்ச் 8 வரை நடைபெறவுள்ளது.

(i) முதல் நாளில் நடைபெறும் 3 ஆட்டங்களில், கடைசியாக, நடப்பு சாம்பியனான இந்தியா - அமெரிக்காவுடன் மோதுகிறது. முதல் இரு ஆட்டங்களில், நெதர்லாந்து பாகிஸ்தான், ஸ்காட்லாந்து மேற்கிந்தியத் தீவுகள் சந்திக்கின்றன. பாகிஸ்தானின் ஆட்டங்கள் அனைத்தும் இலங்கையில் நடைபெறவுள்ளன.

(ii) போட்டியில் பங்கேற்றுள்ள 20 அணிகளும், தலா 5 அணிகள் வீதம் 4 குரூப்களாக பிரிக்கப்பட்டுள்ளன. குரூப் சுற்று முடிவில் ஒவ்வொரு குரூப்பிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள், சூப்பர் 8 கட்டத்துக்குத் தகுதிபெறும்.

6. வேளாண் துறையில் எண்ம முறை வேகமாக விரிவுபடுத்தப்படுகிறது; தமிழகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி விவசாயிகளுக்கு (டிஜிட்டல்) எண்ம அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்று மாநிலங்களவையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்தார்.

(i) ‘அக்ரி ஸ்டாஸ்க்' இணையதளம் மூலம் வேளாண்மை, விவசாயிகள் தொடர்பான அனைத்து விவரங்களும் எண்ம முறையில் சேகரிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. விவசாய கிராம விவரங்கள், அங்குள்ள காலநிலை, உயிரிச்சூழல், சாகுபடிப் பயிர்கள் என அனைத்து விவரங்களும் அதில் இடம் பெற்றுள்ளன. தமிழகம், ஆந்திரம், பிகார், குஜராத், உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம், கர்நாடகம் உள்பட 19 மாநிலங்களைச் சேர்ந்த 8.48 கோடி எண்ம விவசாயிகளுக்கு (டிஜிட்டல்) அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் அவர்களின் நில விவரம், குடும்ப விவரம் என அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ii) அடுத்ததாக கோவா, சிக்கிம், ஜம்மு-காஷ்மீர் விவசாயிகளின் விவரங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. இந்தத் திட்டத்துக்காக மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அனைத்து நிலைகளிலும் உதவி வருகிறது.

(iii) விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்குவதன் மூலம் அவர்களுக்கான நிதியுதவி நேரடியாக வங்கிக் கணக்கில் செலுத்தப்படுவது, குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யும் விளைபொருளுக்கு பணம் செலுத்துவது என அனைத்தும் எளிதாக நடைபெறுகிறது.

(iv) செயற்கை நுண்ணறிவு துணையுடன் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்புகள் துல்லியமாக அறியப்பட்டு உரிய நிவாரணம் வழங்கவும் எண்ம முன்னெடுப்புகள் பெரிதும் உதவுகின்றன என்றார்.

7. திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் ரூ.2,091 கோடியில், 2,104 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

(i) ஜப்பான் நாட்டை சேர்ந்த மிட்சுபிஷி எலக்ட்ரிக் கார்ப்பரேஷன், ஆற்றல் மற்றும் மின்சார அமைப்புகள், தகவல்தொடர்பு அமைப்புகள், மின்சார, மின்னணு உபகரணங்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இதில், மிட்சுபிஷி எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட், இந்த உலகளாவிய முன்னணி நிறுவனத்தின் துணை நிறுவனமாகும்.

(ii) இந்த நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்படும் அறைகளுக்கான குளிர்சாதன இயந்திரங்கள் மற்றும் காற்றழுத்த கருவிகள் உற்பத்தி ஆலை திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் ரூ.2,091 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையின் மூலம் 2,104 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.